[1974 மார்ச் 7

Employees of Transport Companies

*329 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state whether the employees of the Private Transport Companies that were taken over by the Government have been absorbed in the services of the respective Transport Corporations?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

திரு. என். கே. பழனிசாமி: சார், தஞ்சாவூர் சாமி மோட்டார் சர்வீஸ், தமிழ்நாட்டிலே உள்ள டி.வி.எஸ். மோட்டார் சர்வீஸ் ஆகியவைகளை சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த நிறுவனங்களிலே வேலை பார்த்துக்கொண்டுவந்த தொழிலாளர்களுக்கு அரசு போக்குவரத்துத் துறையில் வேலை கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எஸ். எம். டி. யை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை, அவர்களே நடத்த முடியாமல் பேருந்துகளை விட்டு விட்டுச் சென்று விட்டார்கள். அந்த வழித் தடங்களிலே நாமாக சில பேருந்துகளை விடுகிறோம், ஆகவே அதை அரசாங்கம் மேற்கொள்ளவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, தனியார் போக்குவரத்துத் துறையிலிருந்து அரசு நிறுவனங்களிலே வேலைக்கு அமர்த்தப்பட்ட தனியார் துறையிலிருந்து பணியாளர்களுக்கு அவர்களுடைய முந்தைய சர்வீசும் கணக்கிலே சேர்த்துக் கொள்ளப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு பொதுத் துறையிலே இருக்கின்ற பணியாளர்களுக்கு ஷேர் கொடுக்கப்படுவதைப் போன்று தனியார் துறையிலிருந்து பொதுத் துறைக்கு வந்து பணியாற்றுகின்ற அந்தப் பணியாளர்களுக்கும் அதிலே ஷேர் கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 50 பேருந்துகளுக்கு மேலுள்ள நிறுவனங்களை அரசுடமையாக்குகின்ற சட்டத்தின் படி அவர்கள் ஏற்கெனவே அங்கே பணிபுரிந்து இருந்தால் அவர்

1974 மார்ச் 7]

களுக்கு அந்த சர்வீசும் கணக்கிலே எடுத்துக்கொள்ளப்படுகிறது. தனியார் துறையிலே இருந்து வருகின்ற பணியாளர்களுக்கும், பொதுத் துறைப் பணியாளர்களைப் போன்று ஷேர் கொடுக்கப் படுகிறது.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அரசுத் துறையிலே பணியாற்றுகின்ற போக்குவரத்துத் துறைப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படுவதைப் போன்று ஊதியம், ஊதிய உயர்வு எல்லாம் தனியார் துறையிலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே அரசுத் துறையைப் போன்று அங்கேயும் கொடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசாங்க போக்குவரத்துத் துறையிலே தரப்படுவதைப்போன்று தனியார் துறையிலே போதுமான ஊதியம் அளிக்கப்படவில்லை யென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது முழுக்க முழுக்க உண்மை. ஆனால் அவர்களை அப்படிக் கொடுக்கவேண்டு மென்று வற்புறுத்த வழியில்லை, அதனால்தான் நாட்டுடைமைத் திட்டத்தை நாம் வலியுறுத்துகிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தனியார் துறையிலிருந்து சேர்த்துக் கொள்ளப்பட்ட நாட்டுடமையாக்கப்பட்ட நிறுவனங்களிலே பணி யாற்றுகின்ற ஊழியர்களுக்கு, அரசாங்க ஊழியர்களுக்குத் தரப் படுவதைப்போன்ற ஊதியம், மற்றும் சலுகைகள் எல்லாம் ஒழுங் காகக் கிடைப்பதில்லை. அவர்கள் பதவிகூட நிரந்தரமாக்கப் படாத நிலைமையில் அவர்கள் டெம்பரரியாகத்தான் வைக்கப் பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் எல்லாம் மிகவும் வேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றி அவர்களுக்கு நிரந்தரமான பதவியும் ஊதியமும் மற்ற சலுகைகளும் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் குறிப்பிட்ட குறைகள் எங்கேனும் இருந்தால் அதைத் தெரிவிக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தனியார் துறையிலே கண்டக்டர்களாகப் பணியாற்றியவர்கள் அரசுடைமையாக்கப் பட்ட பேருந்துகளிலே வரவேண்டுமென்றால் அவர்களுடைய

குவாலிபிகேஷன் குறைவாக இருந்தால் எக்சம்பஷன் கொடுத்து அவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே—எஸ். எஸ். எல். சி. படித்தவர்களாக இருந்தால்தான் அரசாங்கப் போக்குவரத்துத் துறையிலோ அல்லது கார்ப்பரேஷனிலோ பணியாற்ற முடியும் என்ற நிலைமை இருப்பதால்—அவர்கள் எந்த வகுப்புவரை படித்திருந்தாலும் கூட, அவர்கள் ஐந்தாவது வகுப்பு, ஆறாவது வகுப்புவரை படித்திருந்தால்கூட அவர்களுக்கு எக்சம்ப்ஷன் கொடுத்து அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே அப்படிப்பட்ட வாய்ப்பை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போன்று இதை இரண்டு முறையிலே அணுக வேண்டும். ஒன்று, 50 பேருந்துகளுக்கு மேலாக உள்ள நிறுவனங்களை அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற சட்டம் வந்தபொழுது தனியார் துறையிலே இருந்தவர்கள் அந்தத் தகுதி உடையவர்களாக இருந்தாலும் அந்தத் தகுதியில்லாதவர்களாக இருந்தாலும் அவர்கள் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். அதற்குப் பிறகு மீண்டும் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தோம். ஒவ்வொரு மாவட்டமாக நாட்டுடைமைத் திட்டத்தை நிறைவேற்றுவது என்பது அது. அதிலே தனியார் துறையிலே பணியாற்றியவர்களுடைய தகுதி என்னவாக இருந்தாலும் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிலைமைதான் இருக்கிறது. ஆனால் அந்தச் சட்டம் தலைமை நீதி மன்றத்திலே இருப்பதாலே நாம் அவர்களை நேராக எடுத்துக்கொள்ளவில்லை.

பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்

* 330 வினா—**திரு. த. சோனையா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை, பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் புதிய முறையில் வடிவங்களாக்கப் பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம். புது பேருந்துகளின் நீளத்தை 33 அடி வரை அதிகரித்து, உட்காரும் இருக்கைகளின் எண்ணிக்கை, நகர, வெளியூர் மற்றும் துரித பேருந்துகளில் முறையே 62, 72, 60 என்று அமைக்கப்பட்டுள்ளது.